I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.4
M.C.O.P.NO.478/2018

| | | |
|---|---|---|
| Name | : | Parveenkumar |
| Husband Name | : | Dhasaradhan |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.10.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 03.45 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**குறுக்கு விசாரணை**

நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். யார் கேட்டு கொண்டதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். விபத்தை பற்றி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கிவல்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த விபத்து 27.06.2017 அன்று மாலை 04.45 மணியளவில் நடந்தது. அடுத்த 28 ஆம் தேதி யாருடைய கல்யாணம் என்றால் என்னுடைய மச்சினிச்சியின் திருணமத்திற்காக போனேன். நான் இருச்சக்கர வாகனத்தில் போனேன். இறந்த நபரும் இருச்சக்கர வாகனத்தில் தான் பயணம் செய்தார். இருச்சக்கர வாகனத்தின் நிறம் என்ன என்றால் TVS Star city அதன் பெயர் ஆனால் அதன் நிறம் நினைவில்லை. அந்த வண்டியின் எண். TN 23 DJ 9963. எனக்கும் அவருக்கும் எவ்வளவு தொலைவில் போனோம் என்றால் சுமார் 100 அடி இருக்கும். அடிப்பட்டதற்கு பிறகு அவர் அருகே சென்று

எங்கு அடிப்பட்டது என்று போய் பார்த்தீர்களா என்றால் போய் பார்த்தேன் கை, கால் எல்லாம் அடிதான், அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நான் அவர்அடிப்பட்டதை பார்த்துவிட்டு புகார் கொடுக்கவில்லை என்றால் அவரும் மாப்பிள்ளை வீட்டுக்காரர், நானும் உறவினர் என்பதால் திருமண வேலையாக சென்று விட்டேன். இறந்தவரின் ஈம சடங்கில் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த விபத்திற்காக காரணமே அவர் இருச்சக்கர வாகனத்தை ஓவர் டேக் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, வேன் தான் அதி வேகமாக வந்தது. அந்த தோஸ்த் வேனின் நிறம் நினைவில்லை. நானும் இறந்தவரும் உறவினர் என்பதால் அவருக்காக இழப்பீடு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நேரில் பார்த்ததை தான் சொல்கிறேன். விபத்து அன்று நான் இருச்சக்கர வாகனத்தில் போகவில்லை என்றாலும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அவர் தலைகவசம் அணிந்திருந்தார். மனுதாரருக்கு இழப்பீடு பெற வேண்டும் என்று நீதிமன்றத்தில் அவருக்காக பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 03.55 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.10.23 19:27:21 +0000

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.